[5th February 1966

சர்க்கரை ஆலை

* 113 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் கைத்தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட கேள்விக்குப் பதிலளிப் பாரா—

(அ) அலங்கா நல்லூர் (மதுரை மாவட்டம்) தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறதா ?

(இ) ஆம் என்றால் விவரம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. எஸ். முருகையன் : சர்க்கரை ஆலைகளுக்கு லைசென்ஸ் கொடுக்கும்போது எந்த அடிப்படையில் கொடுக்கப்படுகிறது ? சர்க்கரை ஆலைக்கு லைசென்ஸ் போதுமான கரும்பு உற்பத்தியாகக் கூடிய இடத்தில் கொடுப்பதில்லை. கள்ளக்குறிச்சியில் ஒரு சர்க்கரை ஆலைக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அங்கு கரும்பு உற்பத்தி அதிகமாகக் கிடையாது. பங்குப் பணம் கொடுப் பதும் அங்கு அதிகம் கிடையாது. திருவண்ணாமலையில் இருந்து தான் அதிகமாக வசூலித்திருக்கிறார்கள். ஆகவே இனிமேல் லைசென்ஸ் கொடுக்கும் போது எந்த எந்த அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கொள்கை நிர்ணயம் செய்யப்படுமா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சர்க்காருக்கு கொள்கை இருக்கிறது. ஆனால் கனம் அங்கத்தினர் சொல்வதுபோல் மற்ற சிலர் வந்து கள்ளக்குறிச்சி சிறந்த இடம், அங்குள்ள மக்களிடம் இருந்து பணம் வசூலித்துக் கொடுக்க முடியும் என்றும், கரும்பை உடனே உற்பத்தி செய்யமுடியும் என்றும் சொல்கிறார்கள். எங்க ளிடம் தூரதிருஷ்டிக் கண்ணாடி கிடையாது. இருப்பதை வைத்துப் பார்த்துச் செய்வதுதான்.

Sri C. CHIRANJEEVULU NAIDU : How many sugar factories are proposed to be opened in the next Five-Year Plan? May I know whether it is a fact that a two man Committee has been constituted to investigate the possibility of starting sugar factories and whether that Committee has submitted its report?

The Hon. Sri R. VENKATARAMAN : The State Government investigated the possibility of starting sugar factories in the State. They have come to the conclusion that about six or seven factories could be established. The Government sent an Investigation Team and they seem to have come to the conclusion that there is not much scope for a large number of sugar factories in Madras. That is being discussed.

Fire Service Station at Arni

* 114 *Q.*—**Sri C. KOTHANDARAMA BAGAVATHAR** : Will the Hon. the Minister for Home be pleased to state whether there is any proposal to provide a Fire Service Station at Arni in North Arcot district during 1966?

கனம் திரு. பூ. கக்கன் : இல்லை.